DAIM. 2.,
2,000.

DEPARTMENT OF ANTHROPOLOGY PUBLICATIONS
Indian Languages Series, No. 2

# ஜனத்தொகையில் காணப்படும் இன அம்சங்கள்

எழுதியவர்
டாக்டர் பி. எஸ். குஹா
டைரக்டர், டிபார்ட்மெண்ட் ஆப் ஆன்திரோபாலஜி

PUBLISHED BY THE
MANAGER OF PUBLICATIONS
DELHI, INDIA

இந்தியன் மியூஸியம்
கல்கத்தா

Price As. 5 or 6 d.

DEPARTMENT OF ANTHROPOLOGY PUBLICATIONS
Indian Languages Series No. 2

# ஜனத்தொகையில் காணப்படும் இன அம்சங்கள்

எழுதியவர்
டாக்டர் பி. எஸ். குஹா
டைரக்டர், டிபார்ட்மெண்ட் ஆப் ஆன்திரோபாலஜி

இந்தியன் மியூஸியம்
கல்கத்தா

# A TAMIL RENDERING OF Dr. B. S. GUHA'S

"Racial Elements in the Population"

BY

K. GNANAMBAL
DEPARTMENT OF ANTHROPOLOGY,
Indian Museum, Calcutta

# முன்னுரை

மானிட வர்க்கநூல் (ஆன்திரோபாலஜி) ஆராய்ச்சிகளினுல் பெறப் படும் அரிய உண்மைகளை யாவரும் படித்து, பயனடையத்தக்க நடைமுறை மொழியில் வெளியிடுவது, இவ் விலாக்காவின் நோக்கங்களுள் முக்கிய மானது. இவ் விலாக்காவை நிர்மாணித்தபோது, இத்தகைய வெளியீடு களின் பயன் பெரும்பாலும் வற்புறுத்தப்பட்டது. எனவே ஹிந்துஸ்தானி, வங்காளம், உருது, தமிழ், நமது தேசீய மொழியான ஹிந்தி ஆகிய வற்றுள் பொதுமக்கள் யாவரும் கற்று இன்புறத்தக்க சிறுநூல்களை வெளியிட முயற்சிகள் செய்யப்பட்டன.

இந்திய நாட்டில் காணப்பெறும் இன அம்சங்களைக் குறித்த அறிவு நம்மவரிடை குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. எனவே, எனது ஆங்கில வெளியீடாகிய "ஜனத்தொகையில் காணப்படும் இன அம்சங்கள்" என்னும் சிறுநூலை இவ் வரிசையில் முதல் மொழிபெயர்ப்பு வெளி யீடாக அச்சிடத் துணிந்தோம். வங்காள மொழிபெயர்ப்பு வெளிவந் துள்ளது. ஹிந்தி, உருது மொழிபெயர்ப்புகளை அச்சிடுவதற்குரிய முயற்சி கள் நடைபெற்று வருகின்றன. இவ்வெளியீட்டைத் தொடர்ந்து வேறு சாஸ்திர சம்பந்தமான நூல்களையும் அவ்வப்பொழுது ஏற்றவாறு வெளி யிடுவதெனத் தீர்மானித்துள்ளோம்.

கல்கத்தா,
10—10—1950.

ஸ்ரீ பிரஜா சங்கர் குஹா.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஜனத்தொகையில் காணப்படும் இன அம்சங்கள் | ... 5 |
| 2. | இந்தியாவில் இனவகைகள் | ... 9 |
| 3. | நீக்ரிட்டோக்கள் | ... 10 |
| 4. | பழைய ஆஸ்திரேலிய இனம் | ... 11 |
| 5. | மங்கோலிய இனம் | ... 12 |
| 6. | மத்திய தரைக்கடல் இனம் | ... 14 |
| 7. | மேல் நாட்டு அகன்ற மண்டையர் | ... 16 |
| 8. | நார்டிக் மக்கள் இனம் | ... 18 |
| 9. | இனப் பிரிவுகளும் மொழி கலாசாரப் பாகுபாடும் | ... 21 |
| 10. | சித்திரங்களின் விவரம் | ... 24 |
| 11. | இனவகைகளைக் காட்டும் தேசப் படம் | ... 25 |

# ஜனத்தொகையில் காணப்படும் இன அம்சங்கள்

இந்தியாவில் காணப்பெறும் இனங்களையும், அவற்றின் பங்கீட்டையும் நோக்கு முன்னர், இனம் என்ற சொல்லினுல் பெறப்படும் பொருளையும், குறிப்பையும் ஆராய்வது அத்தியாவசியம். ஏனெனில் தற்போதைய வழக்கில் இனம் என்ற பதம் பற்பல பொருள்களில் வழங்கப்படுகிறது. மொழியோடு சம்பந்தமுடைய பொருளில் பயிலுவதே பெருவழக்காகவும் உள்ளது. உதாரணமாக லத்தீன் இனத்தவர், ஆரிய இனம், திராவிட இனம் என்றெல்லாம் குறிக்கிறோம் (லத்தீன் மொழி ஆரிய மொழி, திராவிட மொழிகளைப் பேசுவதாலேயே இவர்களுக்கு இக்குறியீடு பெறப்படுகிறது). சிற்சில சமயங்களில் ஒரு தேச மக்களைக் குறிப்பதற்கும் இனமென்ற சொல்லை வழங்குவதுண்டு. ஆங்கிலேய இனம் என்னும்போது இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் மக்களெனவே பொருள்படுகிறது. வேறு சிற்சில சந்தர்ப்பங்களில் மதம், கலாசாரம் முதலியவற்ருல் ஒன்றுபட்ட ஒரு பகுதியினரைக் குறிப்பதாக இனமென்பதை உபயோகிக்கிறோம். ஹிந்து இனம், மகம்மதிய இனமென்றெல்லாம் கூறும்போது, இந்து மதம், மகம்மதிய மதம் முதலியவற்ருல் இணைக்கப்பட்ட வகையினரென்பதே பொருளாகும். மேற்கூறிய பொருள்கள் இனமென்ற சொல்லின் இலக்கணத்திற்குப் பொருந்துவன அல்ல. உயிர்நூல் சாஸ்திரங்கள் பிராணிகளையோ, தாவரங்களையோ வகைப்படுத்தும்போது அவற்றின் உறுப்பிலக்கணங்களைக்கொண்டு வகைப்படுத்துவதுபோல், அவற்றை இனமெனப் பகுக்கும்போதும் உடலுறுப்புகளின் ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டே வகைப்படுத்துகின்றன. எனவே ஒருதன்மையனவாய உறுப்புகளைப் பெற்ற வகைகள் யாவும் ஓரினமென அழைக்கப்பெறுகின்றன. அவ்வாறின்றி இனமென்னும் பதத்தை மொழி, கலாசாரம் முதலியவற்ருேடு இணைத்துப் பிரயோகிக்கும்போது பல ஐயங்களுக்கு ஏதுவுண்டாகிறது. எனவே இச்சொல்லை மதம், கலாசாரம் என்பனவற்றினின்றும் பிரித்து, உடலுறுப்பு ஒற்றுமையளவிலே பிரயோகப்படுத்துவதே சாலவும் நன்று. மானிட நூல் முறையிலும் இனமென்பது விசேஷப் பொருளையே தருவதாகும். ஆகையால் மனித வர்க்கத்தை இன வகைகளாக வகுக்கும்போது, மேற்கூறியவற்றை நினைவில் வைத்து, வகைப்படுத்தல் அவசியமாகும்.

மனித வர்க்கத்தில் காணப்படும் விசேஷத் தன்மை அதன் வரையறையில்லா வகைகளே. எட்டாத தீவுகளிலும், மனிதன் செல்லவியலாத மலைப்பக்கங்களிலும், இருண்டு அடர்ந்த காடுகளின் நடுவிலும் தனிவாழ்க்கையை நடத்தும் சிலரிடையேயன்றி, பெரும்பாலோரிடை வகைகளை ஒன்றுபடுத்தும் ஒற்றுமைப் பண்புகள் காணப்படுவதில்லை. இவ்வாறு பலதிறப்பட்ட ஜன சமுதாயத்திற்கு செயற்கைக் காரணங்களான நடை, உடை, பாவனை, வழக்க பழக்கங்கள், மதம் முதலியனவே பொறுப்பாகும். ஏனெனில் உடலுறுப்புச்செலவு (transmission) போன்ற மற்றைய காரணங்களில் மனிதனுக்கும், பிராணிகளுக்கும் அதிக வேறுபாடில்லை. பிராணிகளுள் கலப்பு குறிப்பிட்டதொரு சிறு தொகுதியிலே ஏற்படுவதால், கலப்பினுல் தோன்றும் வகைகளும் சிறுபான்

மையே. குடியேற்றத்தினாலும், திக்குவிசயங்களினாலும் மனித வர்க்கத்திலே பரந்த அளவில், விரிந்த பிரதேசங்களில் கலப்பு ஏற்பட்டது. இத்தகையதொரு பரந்த கலப்பினால் பல இன வகைகளும், இணைவுகளும் (combinations) தோன்றின. எனினும் இயற்கை மனிதவர்க்கத்தின் வகைகளைப் பாதுகாப்பதற்குப் பேருதவி செய்தது. யாங்ஙனமெனில் பிராணி வர்க்கத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் இயற்கைத் தேர்வு—(Natural Selections) அதாவது அவசியமில்லாத, தகுதியில்லாத அம்சங்களைச் சிருஷ்டியினின்றும் நீக்கும் முறை—மனித வர்க்கத்தைப் பேரளவில் தாக்கவில்லை.

மெண்டல் என்பவரது கொள்கை வெளியான பின்னர், சிசு பெற்றோரின் பிரதிபிம்பம் மட்டுமல்ல வென்பதை உணர்ந்தோம். குழந்தை கருவிலிருக்கும்போது பெற்றோரின் உறுப்புகளையும், பண்புகளையும் குறுகிய அளவில் பெற்று, ஜனனமடைந்த பின்னர், கருவிலே பெற்ற இலக்கணங்களை விருத்தி செய்துகொள்கிறதென்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. சிசு பெற்றோரிடமிருந்து பெறுவது சிறிய, நீண்ட கோல்போன்ற சிருஷ்டிக் காரணிகளான காமீட் (Gamete) துணுக்குகளே. மானிட சிசுவையாக்கும் நாற்பத்தெட்டு சிருஷ்டிக்காரணிகளுள் (Gamete) அன்னையும், பிதாவும் சம பங்கை அளிக்கின்றனர். இச் சிருஷ்டிக் காரணிகளை வர்ணத்துணுக்குகள் அல்லது கிரோமசோம் (chromosome) என்றும் கூறுவதுண்டு. வர்ணங்களை ஏற்று அணுதரிசினியில் காண இயலுவதால், இவற்றிற்கு வர்ணத்துணுக்குகளென்னும் பெயரிடப்பட்டது. உடலின் பிற அணுக்களைப் போலன்றி, இச் சிருஷ்டிக் காரணிகளான வர்ணத்துணுக்குகள் (Gametic chromosomes) யாதொரு மாறுதலுமின்றி வழிவழியாக ஒரு பரம்பரையினின்றும் அடுத்த பரம்பரைக்கு அளிக்கப்படுகின்றன. இவைதான் மனித வர்க்கத்தின் சேமநிதி. இவ்வர்ணத்துணுக்குகள் ஒரு தன்மையனவல்ல. அவற்றில் காணப்படும் உற்பத்தி அணுக்கள் அல்லது ஜீன் (Gene) என்பதன் அளவைப் பொறுத்து வர்ணத்துணுக்கின் அளவும், வடிவும் வேறுபடுகிறது. இவ்வுற்பத்தி அணுக்களாய ஜீன்களே பாரம்பரியப் பண்புகளை அளிப்பவை. ஜீவனின் மிகச் சிறிய சத்துப்பொருளும் இவையே. நமது வெளியுறுப்புகளும், அகப் பண்புகளும் இச்சிறு ஜீன்களினாலேயே ஆக்கப்படுகின்றன. ஜீன்களின் அமைப்பும், அவை எவ்விதத்தில் மனிதப் பண்புகளை உருப்படுத்துகின்றன என்பதும் திட்டமாகத் தெரியவில்லை. ஆயினும் இச்சிறு உற்பத்தி அணுக்களும், வர்ணத்துணுக்கு (chromosome) கிரோமசோம்களைப்போல் யாதொரு மாறுதலுமின்றி ஒரு பரம்பரையிலிருந்து மற்றொரு பரம்பரைக்கு அளிக்கப்படுகின்றன. சாதாரணமாக ஜீன் என்பது இரண்டு அணுக்கள் சேர்ந்தது. இவ்வணுக்களுள் ஒன்று மற்றொன்றினின்றும் வேறுபடுவதுமன்றி, ஒன்றைவிட மற்றொன்று வலிமையிலும் வேறுபடுகிறது. இத்தகைய முரண் இணைகள் (allelomorphic pairs) எப்பொழுதும் ஒன்றுபடுவதில்லை. கலப்பு நேரும்போது இவை பிரிந்து, இணையில் ஒன்றே, சிருஷ்டிக் காரணியான காமீட்டை அடைகிறது. இவ்வுற்பத்தி அணுக்களான ஜீன்கள் பிரியும் முறையில் யாதொரு நியதியுமில்லை. சிற்சில சமயங்களில் இவ்வுற்பத்தி அணுக்களுள் ரஸாயன மாறுதல்கள் நிகழ்வதுண்டு. இம்மாறுதல்களின் காரணம் தெரியவில்லை. எனினும் ஜீன்களில் ஏற்படும் ரஸாயன மாறுதல்களின் காரணத்தால் மனிதப் பண்புகளுள் ஒன்றோ, பலவோ வேறுவேறு அளவுகளில் மாறுதலடைகின்றன என்பது விளக்கமெய்துகிறது.

வேறு குணமுடைய இரண்டு, மூன்று அம்சங்கள் (strains) கலப்பதினுல் பல புதிய இணைவுகளோ, வகைகளோ தோன்றுவது இயற்கையே. மானிட சரீரமோ பல்லாயிரக் கணக்கான ஜீன்களினுல் இயக்கப்படுகிறது. இவற்றினுள் ஏற்படும் மாறுதல்களும் கணக்கற்றவையாயின், இம்மாறுதல்களினுல் தோன்றும் மறு இணைவுகளும் (re-combinations) கணக்கிலடங்கா எனவே நினைப்போம். அவ்வப்பொழுது தோன்றும் மறு இணைவுகள் எண்ணிக்கை அற்றவை எனின் பிராணிகளையோ, மனித வகைகளையோ குறிப்பிட்ட வகைகளுள் பாகுபடுத்திக் கூறுவது யாங்ஙனம்? உண்மை அவ்வாறல்ல. உற்பத்தி அணுக்களென்னும் ஜீன்கள் பெரும்பாலான மாற்றங்களுக்கு ஆளாவதில்லை. புது, புது வகைகளும் மானிட வர்க்கத்திலே தோன்றுவதில்லை. இயற்கை வழிப்படி மிருக வர்க்கத்திலும் பெரும் மாற்றங்களும், புத்தம் புது வகைகளும் அருகியே தோன்றுகின்றன. இரண்டாவதாக உருவ அமைப்பு, உறுப்பமைப்புப் போன்ற அடிப்படையான பண்புகளிலும் உற்பத்தி அணுக்களினது (ஜீன்) தன்மை மாறுவதில்லை. உதாரணமாக முதுகெலும்பு அமைப்பு, பிரதான அங்க அமைப்பு முதலியவற்றில் மறு இணைவினுலோ, ஜீன்களின் ரஸாயன மாறுதல்களினுலோ ஏற்படும் இயற்கைக்கு மாறுபட்ட புது மாற்றங்கள் நிகழுவதில்லை. ஜீன்களின் அமைப்பே மிகவும் சூக்குமமானது. இச் சூக்கும அமைப்பைத் தாக்கி எழும் இயற்கைக்கு ஒவ்வாத, பொருத்தமில்லாத இணைவுகள் தோன்றுவதுமில்லை. ஒருக்கால் அவ்வாறு தோன்றினும், அவை நீடித்திராமல் அழிகின்றன. ஆகையால் இயற்கையில் கணக்கற்ற புது வகைகள் தோன்ற ஏது விருப்பினும் இயற்கை சக்திகள், தம்து சூழ்நிலைக் கேற்ற, தகுதியுடைய வகைகளே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்று சிருஷ்டியில் நிலைத்திருக்குமாறு செய்கின்றன. சூழ்நிலைக்கு ஏலாதவையும், பொருத்தமற்றவையும், மெல்ல, மெல்ல மறைகின்றன. இம்முறையில் இயற்கை சிருஷ்டியைச் சமன்செய்து தகுதியுடைய வகைகளே ஓங்கிப்பெருகுமாறு செய்கிறது.

மனிதனது ஆதிப்பிறப்பை நோக்கும்போது மானிடன் மரங்களில் வாழ்ந்த குரங்கினத்தினின்றும் வேறுபட்டு டிரையோபிதிகஸ் (Dryopithecus) வகையோடு ஒற்றுமை பெற்று, நீண்ட காலமளவில் சிறுகச் சிறுக மாறி, இறுதியில், மனித வடிவத்தைப் பெற்றுன் என்பது புலனுகிறது. மனிதனுக்கும் மேற்கூறிய குரங்கினத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமையின் அளவை சமீபத்தில் சிவாலிக் (Sivalik) மலைகளில், ஹெல்மட்-டி-டெரா (Hellmut de t erra) என்ற இடத்தில் கண்டெடுத்த எலும்புகளினின்றும் ஓரளவிற்கு ஊகிக்கலாம். மனித இனத்தைப் பெரும்பாலும் ஒத்துள்ள ரமாபிதிகஸ் (Ramapithecus) என்னும் குரங்கினத்தின் தாடை எலும்புகளே மேற்கூறிய இடத்தில் கிடைத்தவை. மனிதனது கீழ் அரைப் பற்களைப் (Lower molar teeth) போலவே, இவற்றின் கீழ் அரைப் பற்களும் ஐந்து பள்ளங்களைப் பெற்றுள்ளன. தந்த வளைவிலும், கிழிக்கும் பற்களின் அளவிலும், பற்களிடையே வெளி இன்மையாலும், இவை மற்ற குரங்குகளைக் காட்டிலும் மனிதனையே பெரும்பாலும் ஒத்துள்ளன. மற்றைய கவிக்குலங்களோ, கைவீச்சைப் பலப்படுத்தி, கைகளையும் கால்களையும் மரக்கிளைகளைப் பற்றுவதற்குப் பயன்படுத்தி, மரத்தில் வாழ்வதற்கேற்ற உறுப்புகளை உருவப்படுத்தியதால், ஆதியினத்தினின்றும் வேறுபட்டுள்ளன. மனிதனே நிலத்திலே வாழுவதற்கேற்ற கால்களையும், நிலமண்டல வாழ்க்கைக்கும், முன்னேற்றத்திற்கும் உதவும் கைகளையும் உருப்படுத்தி, குரங்கினின்றும் வேறுபட்டான். மானிடன் நான் எனப் பெருமை

கொள்ளும் நவயுக மனிதனும், மிகமிகப் பழங்காலத்தே பிதிகன்திரோபஸ் (Pithecanthropus) ஸினன்திரோபஸ் (Sinanthropus) ஈயோன்திரோபஸ் (Eonthropus) போன்ற குரங்குகளை ஒத்து உயர்ந்த புருவ எலும்பு, முகவாய்க்கட்டை இல்லாத தாடைகளும் பெற்று விளங்கிய ஓர் வகையினின்றும் பையப்பைய உருமாறி தனது தற்போதைய வடிவைப் பெற்றவனே. மேற்சொல்லப்பட்ட ஆதிமானிட வகைகளோ நரவடிவத்தைப் பெருமல், பனியுகத்தின் பெரும் மாறுதலுக்கு உள்ளாகி மறைந்தன. இத்தகைய உருவமாற்றம் (மனித வடிவு) குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் தோன்றியதெண்பதற்கு ஐயமில்லை. ஏனெனில் இவ்வர்க்கத்திற்குரிய விசேஷ உறுப்புகளும், பண்புகளும் மானிட இனம் முழுமையிலும் காணப்படுகின்றன. பலவகைக் குரங்கினங்களினின்றும் பலவிடங்களில் மனிதன் தோன்றினனெனக் கூறுவோமாயின் மானிட வர்க்கத்தில் காணப்படும் அங்க ஒற்றுமைக்கும், பொதுப் பண்புகளுக்கும் காரணமில்லை.

மனித வடிவம் பெற்றதும், மானிடன் இடமாற்றத்தில் முனைந்தான். செறிந்த ஜனத்தொகை, உணவு தேடுதல், உடைமையைக் கைப்பற்றும் போர்கள், இயற்கை சக்திகள் முதலான பல்வேறு காரணங்கள், மக்களை வேற்றிடங்களை நாடிச் செல்லுமாறு தூண்டின. அவரவர் குடியேறிய இடத்தின் சூழ்நிலைக்கேற்றவாறு மானிட வகையிலும் புது மாறுதல்களும் தோன்றி, ஒரு வகையை வேருெரு வகையினின்றும் பிரித்தன. இவ்வாறு சூழ்நிலைக் காரணத்தால் எழுந்த மாறுதல்கள் நிரந்தரமாகி வழிவழியாகவும் செலுத்தப்பெற்றன. மக்களின் பேரினங்களெனக் கருதப்படும் நீக்ராயிட் (Negroid) மங்கோலாயிட் (Mongoloid) யுரேஷிய அல்லது காகசீய (Eurasiatic or caucasoid) இனங்கள் இம்முறையில் தோன்றியனவே. இன்றளவும் இவ்வினங்களைச் சார்ந்தவருள் அவரவரது வாசஸ்தல சம்பந்தத்தைக் காட்டும் பண்புகள் ஓரளவிற்குத் தென்படுகின்றன; எனினும் இத்தகைய சூழ்நிலை மாறுதல்கள் மனிதனது அடிப்படையான பண்பைத் தாக்காமல் மேற்போக்கான நிறம், கேசவடிவு, நாசியின் உருவம், முகம், தலை முதலியவற்றின் அளவு, நேத்திர வடிவம், ரத்தத்தில் காணப்படும் சில ரஸாயன அமைப்பு முதலியவற்றையே மாற்றின. மெண்டல் என்பவரது கொள்கைகளும் இவ்வேறுபாடுகளையே குறிக்கின்றன. பனியாறுகள் (glaciers) இப்பூமண்டலத்தை மூடியிருந்த நாட்களிலேயே முதல் மனிதன் யாதொரு தடையுமின்றி தன்னினத்தவரோடு கலந்தான். இதன் காரணமாக புது இணைவு வகைகள் மனித வர்க்கத்திலே தோன்றின. இவ்விணைவு வகைகளே மானிட இருப்பிட வரலாற்றை இணைக்கும் தொடர்புகளாகவும் விளங்குகின்றன. சிருஷ்டியில் எழுந்த எல்லா வகைகளும் நிலைத்திருக்கவில்லை. வாழ இயலாதன, ஒவ்வாதன மாண்டொழிந்தன. இவ்வாறு தேர்ச்சியினுல் பொது வம்சாவளியும், பரம்பரைப் பண்புகளையும் பெற்ற தனித்தனி வகைகளுக்கே இனம் எனப் பெயர் வழங்கப்பட்டது. எனினும் மனித வர்க்கத்தில் இனங்களினுள் வேறுபாடு மிகக் குறுகியதே. மிருகங்கள் தனித்து தம்மினத்துள்ளே கலக்கின்றன. மனிதனே அவ்வாறின்றி பலவகையினர்களோடும் கலப்பு ஏற்படுத்துகிருன். எனவே மனித வர்க்கத்தை இனங்களாகப் பிரிக்கும் போது அவற்றின் பரம்பரைப் பண்புகளைக்கொண்டு வகைப்படுத்துவதற்கே, இனமெனப் பிரிக்கிருேம்.

## இந்தியாவில் இனவகைகள்

பழங்கற்காலம் (Palaeolithic) முதல் சரித்திரகாலம் வரை நமது நாட்டில் குடியேறிய பற்பல மக்கள் வகைகள் கலந்தே, தற்போதைய பாரத நாட்டு ஜனத் தொகையென விளங்குகின்றது. நமது நாட்டின் இயற்கை அமைப்பை நோக்கின் வெளிநாட்டவர் குடியேறுவதற்குரிய வசதிகள் இல்லையெனவே தோன்றுகிறது. ஆசியா கண்டத்தின் தென்கோடியில், ஒரு புறத்தில் பிரம்மாண்டமான மலைத்தொடர்களையும், மற்றைய மூன்று பக்கங்களில் ஆழ்ந்த கடலையும் எல்லைகளாகப் பெற்றுள்ள இந்தியா, இயற்கையிலேயே பிறநாடுகளினின்றும் பிரிக்கப்பட்டுள்ளது. வடபுறத்து மலைத்தொடர்களில் காணப்படும் கணவாய்களே பிறநாட்டவரை அனுமதிக்கும் வாயில்களாயின. இக் கணவாய்களின் வழியாக உட் புகுந்தவர் மெல்ல மெல்ல நாட்டின் பழங்குடி மக்களைக் கீழ்புறமாகவும், தென்திசைக்கும் விரட்டி, ஒதுக்கினர். மேற்கூறிய இரண்டு திசைகளிலும் இன்றளவும் இப்பண்டைய மக்களின் இனக்குறிகள் பேரளவிற்குக் காணப்படுகின்றன. இவ்வாறு ஒதுக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கு உயர்ந்த மலைகளும், அடர்ந்த காடுகளும் சரணளித்தன. நாகரிகத்தின் நீண்ட கைகள் எட்டாத இவ்வொதுக்கிடங்களில், இம்மக்கள் தமக்குரிய வாழ்க்கையை யாதொரு தடையுமின்றி நடத்தி வருகின்றனர். இதனால் உலகில் வேறெந்த இடத்திலும் காணப்படாத அளவிற்கு இந்திய மக்களிடையே பழங்குடிகளது அம்சங்கள் காணப்படுகின்றன. இவ்வம்சங்கள் மனித வர்க்கத்தின் பெரும் இனப்பிரிவுகள் யாவற்றினின்றும் பெறப்பட்டவை. இப்பிரிவுகளாவன :

I. நீக்ரிட்டோ (The Negrito)

II. பழைய ஆஸ்திரேலிய இனம் (The Proto—Australoid)

III. மங்கோலிய இனம் (இதில் இரண்டு பிரிவுகள் உள).

1. பழைய மங்கோலாயிட் இனம் (Palae— Mongoloid)
   (அ) நீண்ட தலையுடையவர்.
   (ஆ) அகன்ற தலையுடையவர்.
2. திபெத்திய மங்கோலாயிட் (Tibeto— Mongoloids)

IV. மத்தியத் தரைக்கடல் இனம் (The Mediterranean)

1. பழைய மத்தியத்தரைக்கடல் இனம் (Palae—mediterranean)
2. மத்தியத் தரைக்கடல் இனம் (Mediterranean)
3. கீழ்நாட்டு மக்கள் இனம் (Oriental type)

V. மேல்நாட்டு அகன்ற மண்டையர் (Western Brachycephals)

1. ஆல்பினாயிட் மக்கள் (alpinoids)
2. டினாரிக் இனம். (The Dinarics)
3. ஆர்மினாயிட் மக்கள் (The Armenoids)

VI. நார்டிக் மக்கள் இனம் (The Nordics)

# 1. நீக்ரிட்டோக்கள்

I. நீக்ரிட்டோக்களே முதன்முதலாகக் குடியேறிய மக்கள். இவ்வினத்தவரே இன்று நமது நாட்டின் ஆதிமக்களாகவும் விளங்குகின்றனர். நீக்ரிட்டோ வென்னும் சொல்லிற்கு நீக்ராயிட் இனத்தைச் சார்ந்த குறளர் என்பதே பொருள். நீக்ராயிட் (Negroid) இனத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களால் இக் குறளர் வகை தோன்றியதுபோலும். இவ்வினத்தைச் சார்ந்த மற்ற வகையினரை ஒத்து நீக்ரிட்டோக்களும் விசித்திர வடிவம்பெற்ற கேசமுடையவர். சாதாரணமாக பிற வகைகளிடம் காணப்பெறுவதுபோல் நீண்ட அல்லது நெறிந்த, சுருண்ட தலைமயிர் அல்ல. இவர்களது கேசம் சுருண்டு, சுருள்களாகவோ, நீண்ட சுருள்களாகவோ தனித்தனி வளையங்களாக தலை முழுதும் படர்ந்துள்ளது. ஸ்பரிசத்திற்கோ மென்மையாய், கம்பளிபோல் மெத்தென்று உள்ளது. நீக்ரிட்டோக்களுள் சிலரிடம் வேறொரு வகை கேசமும் காணலாம். அதாவது, தலைமயிர் சிறுசிறு சுருள்களாக அடர்ந்து, ஒரு சுருளிற்கும், மற்றொன்றிற்கும் இடையே இடைவெளியிருப்பதால், தனித்தனி தொகுதிகளாகத் தோன்றுகிறது. இத்தகைய கேச அமைப்பைப் பெப்பர்கார்ன் (peppercorn) அமைப்பென்று கூறுவர். தனி ரோமத்தைக் குறுக்காக வெட்டிப் பார்ப்போமாகில் நீண்ட தலைமயிரின் குறுக்கு வெட்டைப் போலன்றி, இதன் வெட்டு வடிவம் நீண்ட கோளமாக அணுதரிசினியில் காணப்படுகிறது. (நீண்ட மயிரின் வெட்டு வடிவம் வட்டமானது). சாதாரண நெறிந்த, சுருண்ட கேசத்திற்கு இருப்பதைக்காட்டிலும் இரண்டு ஜீன்கள் அதிகமாக இருப்பதே வட்டச்சுருள் அமைப்பிற்குக் காரணமாகும். பொதுமுறையில் சுருண்ட தலைமயிரின் பலவகைகளாய நெருங்கி அடர்ந்த சுருள், நீண்ட சுருள், பெப்பர்கார்ன் (peppercorn) சுருள் போன்றவையெல்லாம் பரம்பரைப் பண்புகளால் பெறப்பட்டு. பெருங்குழுவாய நீக்ராயிட் இனத்தில் சிறு, சிறு வேறுபாடுகளை எழுப்பின போலும், குறள் வடிவம் (ஐந் தடிக்கும் குறைவாய உயரம்), குறுகிய தலை, முன்புறம் தள்ளிய நெற்றி, வழுக்கைப் புருவம், உருவமில்லா முகவாய்க்கட்டைபோன்ற உறுப்புக்களும் நீக்ரிட்டோக்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன. நீக்ரிட்டோக்கள் செறிந்த கேசமுடையரேனும், நீக்ரோக்களைப்போல் கறுநிறத்தவரல்ல. இவர்களது மண்டை வடிவமும் பலவகையானது. வட்டம், நடுத்தரம், நீண்டதலை முதலிய பல வடிவங்களையும் இவர்களிடையே காணலாம். அங்கங்களும் லலிதமாய், கால்களைவிட கைகள் நீண்டுள்ளன. (நீக்ரோக்களுக்கு கால்களே நீளமானவை). தென்மேற்கு ஆப்பிரிக்காவில் புஷ்மென் (புதர்வாசிகள்) ஹாட்டன்டாட்டு (Hottentto) இனத்துப் பெண்களுள் புட்டச் செறிவு (Steatopygia) அதாவது இடுப்பின் பின்புறத்திலும், தொடைகளின் பின்புறத்திலும் நிறைய சதை செறிந்து, பரம்பரைத் தன்மையாக வருவதைக் காணலாம். இத்தகையதொரு சதைச்செறிவு சிலவகை ஆடுகள் இடையேயும் காணப்படுகிறது. இச் சதைச்செறிவு பால் (sex) சம்பந்தம் பெற்ற உறுப்பு போலும்.

நீக்ரிட்டோக்கள் புது கினியா, பிலிப்பைன் தீவிகள், மலேயா தீபகற்பம், அந்தமான் தீவுகள்போன்ற இடங்களில் காணப்படுகின்றனர். அவ்வப்பொழுது

சுருண்ட கேசமுடைய நீக்ரிடோக்களைக் குறித்த செய்திகள் கிடைத்தபோதிலும் இவ்வகையினரைப் பற்றி திட்டமாக யாதொன்றும் தெரியவில்லை. ஆயினும் சமீபத்திலே கொச்சி, திருவிதாங்கூர் மலைகளில் வசிக்கும் காடர், புலையர்களுள் சுருண்ட கேசமுடையவர் மலிந்திருப்பதாகத் தெரியவந்தது. வயநாட்டின் பழங்குடிமக்களான இருளர்களுள்ளும் இத்தகையோர் இருப்பதாகப் புலனாகிறது. தற்சமயத்தில் நீக்ரிட்டோ இனத்தைச் சேர்ந்தவர் இந்திய ஜனத்தொகையின் சிறு பகுதியேயாகும். நாட்டின் பழங்குடிகளான இம்மக்கள் தென்மேற்கு மலைப் பக்கத்திற்கு ஒதுக்கப்பட்டு, இன்றளவும் மனிதனால் நெருங்க இயலாத காடுகளிலே தமது தொன்மையைக் காட்டும் தனிவாழ்க்கையை நடத்துகின்றனர். பெரம்பிக் குளம்போன்ற இடங்களில் வாழும் இவ்வினத்தவர் தமது இன உறுப்புகளை இழக்காமலே உள்ளனர். இவரது மண்டை வடிவம் அந்தமான் தீவினரதுபோல் உருண்டையல்ல நடுத்தரமாக நீண்டது. சிற்சிலருக்குத் தலைமயிர் சிறு சுருள்களாகத் தோன்றினும், பெரும்பாலோருக்கு நீண்ட நெறிந்த கேசமே உள்ளது. மேனி நிறமும் பழுப்பு நிறம் முதல் அழுத்தமான கருமைவரை விரவியுள்ளது. முகம் குறுகி, வெளிப்புறமாக நீண்டு, சப்பையான அகன்ற நாசியை உடையது. உதடுகள் பருத்து, வெளியே தள்ளி உள்ளன. குட்டை மனிதர்கள்.

இந்திய நீக்ரிடோக்கள் தமது மண்டை வடிவிலும், கேசத்திலும் மிலனேஷியக் குறளர்களை (Melanesian pigmies) பெரும்பாலும் ஒத்துள்ளனர். நீக்ரிடோக்கள் எந்த அளவில் இந்தியாவில் பரவியிருந்தனர் எனத் திட்டமாகக் கூறவியலாது. ஆயினும் அங்கமி நாகர்கள், ராஜ மஹால் மலைவாசிகளுள் சுருண்ட வளையம் போன்ற கேசமுடையவர் காணப்படுவதால் முன்பொரு காலத்தில் நீக்ரிடோக்கள் வடக்கிலும், கிழக்கிலும் பேரளவிற்குப் பரந்து வசித்தனரெனவேகொள்ள வேண்டும். இவர்களின் வழிவந்தோருள் ஒரு பகுதியினர் மலேய தீபகற்பத்தின் மேற்குப் பாகத்திலும் குடியேறினர் போலும். ஏனெனில் அங்கே வாழும் சிமாங்கியர் (Semangs) சாக்கையர் (Sakais) காடர்களது சீப்புக்களைப்போன்ற சீப்புகளைத் தாமும் உபயோகிக்கின்றனர்.

## பழைய ஆஸ்திரேலிய இனம்

II. இந்தியாவின் பழங்குடி மக்களுள் நீக்ரிடோக்களைப் போன்ற மற்றொரு இனத்தவரும் ஜனத்தொகையின் பெரும் பகுதியாக உள்ளனர். உயரம், தலை வடிவம், முக அமைப்பு, அகன்ற சப்பை மூக்கு, தடித்து வெளியே தொங்கும் உதடுகள், கருத்த நிறம் முதலியவற்றை நோக்கும்போது, மேற்கூறிய நீக்ரிட்டோக்களுக்கும், இவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆயினும் நீக்ரிடோக்களைப்போல் பண்படாத உறுப்புகள் இவர்களிடம் இல்லை. எனினும் அவர்களைப் போல அவயவ திருத்தமும் இவர்களுள் காணப்படுவதில்லை. மேலும் இவர்களுள் சுருண்ட வளையம் போன்ற தலைமயிரும் இல்லை. அதற்கு மாறாக இவர்களது கேசம் படிப்படியாக நெறிந்து தோன்றினும் வளையம்போல் சுருண்டில்லை.

இவ்வினப்பகுதி ஆஸ்திரேலிய மக்களையொத்திருப்பதால், பழைய ஆஸ்திரேலிய இனமெனப் படுகிறது. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களுக்குப் புருவம் தடித்து மூக்கின் அடியமிழ்ந்து, உடல் முழுவதும் ரோமம் மூடியிருப்பதுபோல் இந்தியரிடையே காணப் படுவதில்லை எனினும் மேற்கூறிய இலக்கணங்களில் பல செஞ்சுக்கள், மலையர், குறும் பர், எருவர் போன்ற தென்னிந்திய குடிகளுள்ளும், முண்டாக்கள், சந்தால், கோல் முதலியவருள்ளும் ஆங்காங்கே தோன்றுகின்றன. இலங்கை, இந்தோனேஷியா, மிலனீஷியா, ஆஸ்திரேலியா நாடுகளிலுள்ள இவ்வினத்தவரின் உறுப்பிலக் கணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன உறுப்புகள் மத்திம தரத்தினின் றும் சிறுகச் சிறுக அதிகரித்து, இறுதியில் கூறிய ஆஸ்திரேலியரிடம் மிகவும் செறிந்து தோன்றுவதைக் காணலாம்.

இவ்வின உறுப்பிலக்கணத்திற்குக் காரணமாயப் பாரம்பரியப் பண்புகள் இனத்தவருள் பொதிந்து கிடந்து, குறிப்பிட்ட இடங்களில் தனிமுறையில் வளர்ந்தன. இன்றையக் கொள்கையின்படி ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் தென் னிந்தியாவிலிருந்து, இலங்கை மிலனேஷியா வழியாக ஆஸ்திரேலியாவில் குடி யேறினரென்பது உண்மையாயின், தென்னிந்தியாவிலேயே அச்சூழ்நிலையால் இவர்கள் பெற்றிருந்த பண்புகள், ஆஸ்திரேலியப் பாலைவனங்களில் தனிமை யினாலும், அகக் கலப்பினாலும் (inbreeding) மென்மேலும் செறிந்து வளர்ந்தன போலும். ஆஸ்திரேலிய மக்களிடையேயும் தென்னிந்திய மக்களது ரத்த அணுக் சேர்க்கையை (blood grouping) ஒத்த ரத்த அணுச்சேர்க்கையும், அகுளிடிநோஜின் ஏ (Agglutinogen A) அதிகமாகத் தோன்றுவதும் இவ்விரு வகையினரது ஓரினத் தோற்றுவாயைத் திடப்படுத்துகிறது.

இது எவ்வாறாயினும் இப்பழைய ஆஸ்திரேலிய இனவகையே தென்னிந் தியா, மத்திய இந்தியா மக்களுள் மிகுதியாக உள்ளது. ஒதுக்கப்பட்ட சாதி யினர் எனக் குறிக்கப்படும் பலரும் இவ்வின வகுப்பைச் சேர்ந்தவர்களே. இவ்வினம் நமது நாட்டில் எக்காலத்தில் குடிப்புகுந்ததெனக் கூறமுடியவில்லை. தென் னிந்தியாவில் திருநெல்வேலி ஜில்லாவிலே கண்டெடுக்கப்பெற்ற சரித்திர காலத் திற்கு முற்பட்ட மனித கபாலங்களிலும் இவ்வினத்தைச் சார்ந்தவை கிடைத்துள்ளன. வடமொழி இலக்கியத்திலும் இவர்கள் நிஷாதர்கள், மூக்கிலிகள் (அநாசிகள்), கறுத்த நிறமுடையவர், வேற்று மொழியினர் என்றெல்லாம் கூறப்படுகின்றனர். வடமொழி நூலார் நிஷாதர்களென்னும் பெயரால் இப்பழைய ஆஸ்திரேலிய இனத்தவரையே குறித்தனர் என்பதில் ஐயமில்லை.

## மங்கோலிய இனம்

III. மங்கோலிய இனம் குறைந்த சரீர ரோமம், சப்பை முகம், உயர்ந்த தாடை எலும்புகள், தடைப்பட்ட நாசிக்கூடு முதலிய உறுப்புக்களினால் பிற இனங்களினின் றும் வேறுபடுகிறது. இவ்வினத்தின் தனி இலக்கணம் இதன் நேத்திர வடிவமே.

பாதாமிவடிவமான கண்கள் மக்கள் பலரிடையும் காணப்படுகிறது. (வட்டமான உட்புறமும், கூம்பிய வெளிப்புறமுமே இவ்வடிவமாகும்). ஆயினும் இவர்களுள் வெளிப்புறத்திறப்பு சற்று உயர்ந்த இடத்திலிருப்பதால் முழுக் கண்ணிற்கும் சாய்ந்த வடிவமேற்படுகிறது. இத்தகைய சாய்வு கண்களே மங்கோலிய இனமக்களிடையே காணப்படுவதாகும். இதனோடு இமையின் உட்புறத்தில் ஓர் மடிப்பிருப்பதால், பார்வைக்குப் பாதிதிறந்த கீற்றுபோன்ற வடிவம் ஏற்படுகிறது. இத்தகைய நேத்திர வடிவம் இருவேறு முரணிணை ஜீன்களால் (allelomorphic) ஏற்படுவதாகும். இவ்வுறுப்புகள் பிரதான இலக்ஷணமாகவும் விளங்குகின்றன. ஆயினும் இத்தகைய நேத்திர விசேஷம் எல்லா மங்கோலிய வகைகளிலும் காணப்படுவதில்லை. ஒரு சில வகைகளுள் மிகுந்தும், வேறு சிலவற்றுள் அருகியும் தோன்றும். திபெத்தியர், சீனக்காரர் கீழ் சைபீரிய மக்களான இல்யாக்கர், துங்குசுயுகசீர் முதலியோரிடம் கீற்றுக்கண்கள் அதிகம்.

1. இந்நாட்டிலுள்ள மங்கோலிய இனத்தில் மூன்று பிரிவுகள் உள. இவற்றுள் பழைய மங்கோலிய வகையே தொன்மையானது. எனினும் பழைய மங்கோலிய இனவகையில் இனவுறுப்புக்கள் அழுத்தமாகத் தோன்றுவதில்லை.

(அ) பழைய மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர் நடுத்தரமான உயரம், இளம் பழுப்பு முதல் கருமையான நிறம் உடையவர். இவர்களது புருவஸ்தானமும் விசேஷமாக இல்லை. உயர்ந்த தாடை எலும்புகளோடு கூடிய குறுகிய முகம், நடுத்தரமான நாசி—இவ்வுறுப்பு மங்கோலிய இனத்திற்கேற்றாற்போல் சிறுத்து, தடைப்பட்ட வளர்ச்சி பெற்றுள்ளது. முகத்திலும், உடலிலும் ரோமம் குறைந்து காணப்படுகிறது. நேத்திரக் குழி (eyesocket) சாய்வானது. கண்ணிமையின் உட்புற மடிப்பும் ஒரு சிலருக்கு இருப்பதல்லாமல் பொது இலக்கணமாக விளங்குவதில்லை. ஆயின் இவ்வினத்திற்குரிய தனியுறுப்பு யாதெனில், மண்டை வடிவே. பிற இனங்களில் உள்ளதுபோல் மண்டை வட்டமாக இராமல், நீண்டோ, நடுத்தரமாகவோ பிடரி பாகம் வெளிப்புறமாகத் தள்ளி இருக்கிறது. இத்தகைய வடிவம் நீண்ட தலையினத்தவர் யாவருக்கும் பொதுவாயுள்ளது. இப்பழைய மங்கோலிய தனிவுறுப்பு இமயமலையின் கீழ்ப் பிரதேசங்களில் வாழ்வோரது புராதன அம்சமாகவும், ஓரளவிற்கு அஸ்ஸாம், இந்தோ-பர்மிய எல்லைப்புற மக்களுக்கும் காணப்படுகிறது. இச் சிறப்புறுப்பு யுனன் நாட்டிலும், தென் கிழக்கு சீனாவிலும் காணப்படுகிறது.

(ஆ) பழைய மங்கோலாயிட் இனத்தின் இரண்டாவது பிரிவினருக்கு அகன்ற நீளமில்லாத தலை, கருமை நிறம், உருண்டையான முகம் சிறப்புறுப்புகள். இவ்வகையினருக்கு நேத்திர இமையின் உள்மடிப்பும், சாய்ந்த கண்களும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கன. முற்கூறிய பிரிவைப் போல், இது புராதனமானதல்ல. சிட்டகாங்க் ஜில்லாவிலுள்ள சாக்மா (Chakma) மாக் (Magh) முதலிய சாதியிலும், பர்மாவிலுமே இவ்வகையினர் பெருவாரியாகக் காணப்படுகின்றனர்.

2. மூன்றாவதாகக் கூறப்படும் திபெத்திய மங்கோலாயிட் (Tibeto- Mongoloid) பிரிவே மங்கோலிய இனத்தின் விசேஷ உறுப்புக்களையெல்லாம் பேரளவிற்குப் பெற்று

விளங்குகிறது. இப்பிரிவு தலைவடிவத்தில் பழைய மங்கோலிய இனத்தை ஒத்திருந்தாலும் மற்றையப் பண்பு அதைவிடத் தேர்ச்சியுடைத்தாகவே உள்ளது. இவ்வகையினர் நெடியவர்களாய், வெளுத்த நிறம், ரோமம் அதிகமில்லாத உடலுடையவர். இமையின் உட்புற மடிப்பு திட்டமாய், கண்கள் சாய்வு வடிவம் பெற்றவை. நீண்ட, சப்பையான முகம். மூக்கு அதிக உயரமில்லாமல், நீளமாயது. சரீரத்தைப் போலவே மண்டையும் வலியதாய், வேறெந்த இனத்தவருக்கும் இல்லாத அளவு பெரியதாகும். இப்பிரிவினர் சிக்கிம் (Sikkim) புடான் (Bhutan) பிரதேசங்களில் காணப்படுகின்றனர். இவர் ஒருக்கால் திபெத்திலிருந்து குடியேறினவர் போலும்.

மேற்கூறிய நீக்ரிட்டோ, பழைய ஆஸ்திரேலிய, மங்கோலிய இனங்களும், அவற்றின் பிரிவுகளுமே இந்திய நாட்டின் பழங்குடி மக்களாக விளங்குகின்றனர்.

## மத்திய தரைக் கடல் இனம்

**IV.** மேற்கூறியவை யல்லாமல், இந்திய ஜனத்தொகையில் மத்தியத் தரைக் கடல் இனத்தைச் சார்ந்த பிரிவுகளும் ஓரளவிற்குத் தென்படுகின்றன. இவ்வித வகை ஒரு குறிப்பிட்ட வகையினரால் ஆயதல்ல. நடுத்தரமான உயரம், நீண்ட தலை, ஒடிந்த சரீரம், கறுத்த நிறம் போன்ற பொதுவிலக்கணங்களைப் பெற்ற பல பிரிவுகளையும் பெற்றது. இவ்வினத்தவர் ஆதியில் வட ஆப்பிரிக்காவின் தென்புற புல்வெளிகளிலும், அதனையடுத்த ஆசியா கண்டத்திலும் தோன்றி' புயலிடங்கள் பனியுகத்தில் வடக்கு நோக்கிச் சென்றதை ஒத்து, தாமும் மேற்கிலும் கிழக்கிலும் பாறந்தனர் போலும். இந்தியாவில் காணப்படும் மத்தியத் தரைக்கடல் இனத்தவருள் மூன்று வகைகள் உள. இவற்றுள் முதன்மையும், தொன்மையும் பெற்ற பிரிவு எகிப்தியவகையை ஒத்திருப்பதால், அதை பழைய மத்தியத்தரைக் கடல் இனமென அழைத்தலே பொருத்தமாகும். இவரது விசேஷ இலக்கணம் யாதெனில் நடுத்தரமான உயரம், கறுத்த மேனி, மெலிந்த உடல், நீண்டு குறுகிய மேற்புறம் உயர்ந்த தலை, பின்புறம் வெளியே தள்ளிய மண்டை, முகவாய்க் கூம்பி, அங்க ஒற்றுமையில்லாத (disharmonious) முகம் போன்ற உறுப்புகளே. மூக்கு சிறுத்து, சதைப்பற்றுள்ளதாய், சற்று விரிந்துள்ளது. உடலிலும், முகத்திலும் ரோமம் அதிகமில்லை. இவ்வினம் நீக்ராயிட் பெரும் பிரிவினின்றும் முதன்முதலாகப் பிரிந்த கிளைவகை போலும். ஏனெனில் நீக்ராயிட் இன விசேஷங்களான கறுத்த மேனி, உயர்ந்த கபாலவளைவு (Cranialvault) நீண்ட கால்கள் முதலியவை இவ்வகையினருக்கும் உள்ளன. இவ்வினவகையினர் இந்தியாவை எக்காலத்தில் அடைந்தனரெனத் திட்டமாகக் கூற இயலாது. எனினும் ஆதிச்சநல்லூரில் கிடைத்த ஈமப் பாண்டங்களிலும் (burial urns) தக்காணத்தில் கிடைத்த எலும்புக்கூடுகளிலும் இவ்வகையைச் சார்ந்தவை மிகுதியாக உள்ளன. இவ்வினம் வெகுகாலத்திற்கு முன்னரே இந்தியாவிற்கு வந்து புது கற்காலத்தில் (Neolithic times), பெருங் கற்கால (Megalithic) கலாசாரத்தைப் பரப்பியதுபோலும். காலம் செல்லச் செல்ல இவ்வகையினர் தென்புறமாகப்

பரவி,* திராவிடர் எனப்படும் குழுவினரது பெரும் பகுதியாக விளங்கினர். பெரயர் வான் எய்க்ஸ்டெட் (Freiherr von Eickstedt, என்ற ஜெர்மனிய மானிட நூல் பேராசிரியர் 1926—9ல் ஜெர்மானிய இந்து மானிட நூல் ஆராய்ச்சிப் பிரயாணத்தை நடத்திய காலத்தில் இவ்வினத்தவரை மெலனிட் (melanid) இனமென வகைப் படுத்தினர். அவர் இவ்வினம் அடிப்படையாக நீக்ராயிட் இனப்பிரிவைச் சேர்ந்த மெலனீஷிய இனத்தொடர்புடையதெனவே கருதினர். மேற்கூறிய பேராசிரியரின் கொள்கைப்படி 200 இலக்ஷம் தமிழர்களும் இவ்வினவழி வந்தோரெனவே பெறப்படுகிறது. ஆயினும் இவ்வறிஞர்கொண்ட முடிபு ஆதாரமற்றதே. மேனி நிறத்தையன்றி மெலனிட் இனத்தவருக்கும், தமிழருக்கும் வேறு யாதொரு ஒற்றுமையுமில்லை. தமிழருக்கு, ஆப்பிரிக்க நீக்ரோக்களைப்போல் வளையம்போன்ற சுருண்ட தலைமயிர் கிடையாது. அல்லது மெலனீஷியரைப்போல் பம்மென்ற பரட்டை மயிரும் இல்லை. தமிழரின் தலைமயிர் நெறிந்தோ, அரல் போன்றோ (Wavy) இருப்பதன்றி, வளையம்போல் சுருண்டு வளருவதில்லை.

மேனி நிறம் புறத்தோலிலுள்ள (epidermis) வர்ணச் சத்துக்களால் (pigments) ஏற்படுவதாகும். தோலின் நிறம் பல பாரம்பரியப் பண்புகளாலும், சூரிய கிரணங்களி லுள்ள அல்ட்ரா வயலட் (ultra-violet) கதிர்கள் சரீரத்தின் உட்புற அமைப்புக்களைத் தாக்கா வண்ணமும், ஆங்காங்கே வேறுபடுகிறது. பல இனத்தவருக்கு அளவினு லும், தன்மையாலும் வேறுபட்ட பல வர்ணச் சத்துகள் உள. நிறத்தைக் கொடுக் கும் வர்ணச் சத்து ஜீன்கள் சூழ்நிலைக்கேற்றவாறு இணைந்து, தொழிலாற்றுவதால், இடத்திற்கேற்றாற்போல் மேனி நிறமும் மாறுபடுகிறது. உதாரணமாக மா நிறம் (நடுத்தரமானது) பெற்றவர் சமசீதோஷ்ண நாடுகளில் நீண்டகாலம் வசித்தால் வெளுத்த நிறமடைவது கண்கூடாகும். அதேபோல் வெளுத்த நிறத்தவர் உஷ்ணப் பிரதேசங்களில் வசித்தால் கறுத்து விடுகின்றனர். தீக்ஷண்யமான உஷ்ணப் பிர தேசமாகிய தென்னிந்தியாவில் வசித்தவருக்கு வெண்ணிற ஜீன்களைவிட கருநிற ஜீன்களே விரைவாக, வெகுவாக விருத்தியாகி, அவர்களுக்கு இயற்கையாயிருந்த மங்கல் நிறத்தை மேலும் அழுத்த கருநிறமாக மாற்றியது. தென்னிந்தியருக்கும் நீக்ரோக்களுக்கும் நிறவொற்றுமை இருந்தபோதும், இவ்வொற்றுமை இனவொற்று மையெனக் கொள்ளுதல் தகாது.

(2) சிந்து சமவெளியில் கிடைத்த சான்றுகளினின்றும், மேற்கூறிய பழைய இனவகையினின்றும் வேறாய பிரிவு—ஐரோப்பிய இனவகையைச் சார்ந்தது—நமது நாட்டில் குடியேறி இருந்ததாகப் பெறப்படுகிறது. எனினும் இப்பிரிவு, பழைய மத்தியத் தரைக்கடல் இனவகையைப்போல் பழமையானதல்ல. இவ்வகையினரே சிந்து சமவெளி கலாசாரத்தின் கர்த்தாக்கள். இவர்களே பின்னர் புகுந்த ஆரியர் களால் கங்கா நதிப் பிரதேசத்திற்கும், விந்திய மலையின் தெற்கேயும் விரட்டப் பட்டவர். வட இந்திய ஜனத்தொகையின் பெரும் பகுதியாகவும், மற்றைய இடங் களில் மேல் வகுப்பினரென்றும் விளங்குவது இவ்வகையினரேயாகும். இவர்கள் நடுத்தரம் முதல் நெடிய உயரமும், வெளுத்த மாநிறம் முதல் அழுத்தமான கரு நிறமும் பெற்றவர். தலையின் வடிவம் நீண்டதே எனினும், மேற்புற வளைவு குறைந்து, நெற்றி வளைந்துள்ளது. முகம் நீண்டு, திருத்தமான முகவாய்க்கட்டை பெற்றுள்ளது. மற்ற வகையினருள் காணப்படுவதைப்போல் அல்லாமல் நாசி

சதைப் பற்றில்லாமல் நீளமானது. உடலும் ஒடிந்து, ரோமம் நிறைந்து காணப் படுகிறது. தலைமயிரும் புருவங்களும் கருநிறமானவை. மத்தியத் தரைக்கடல் இனப் பிரிவுகளுக்கு அகன்ற, விசாலமான கண்கள் சிறப்புறுப்பாகும். இவ்வளவு பெரிய கண்களை வேறு எவ்வினத்தவருள்ளும் காணமுடியாது.

(3) மத்தியத் தரைக்கடல் இனப்பிரிவுகளுள் கடைசியாக இந்திய நாட்டினுள் புகுந்த வகையைப் பிஷர் (Fischer) என்பார் கீழ்நாட்டு(oriental)வகையெனக் குறித் தார். வடமொழி ஒற்றுமையை ஆதாரமாகக் கொண்டு, இவ்வகையை செமிடிக் (Semitic) வகையென்றும் அழைப்பதுண்டு. இது சரியான பிரயோகமல்ல. எவ்வாறெனில் இப்பிரிவு முற்றிலும் செமிடிக் வகையினரால் மட்டும் ஆயதல்ல. இவ்வகையும் மத்தியத் தரைகடல் இனவகையைப் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வகை யினருக்கு மூக்கு மாத்திரம் நீண்டு, வெளிப்புறமாக வளைந்து, முகத்தின் முக்கிய அங்கமாய் காட்சியளிக்கிறது. (யூதர்கள் அகக்கலப்பினால் இத்தகைய நாசியைத் தமது சாதி இலக்ஷணமாகப் பெற்றுள்ளனர்). சாதாரணமாக மத்தியத்தரைக் கடல் மக்களுக்கு இருப்பதைக்காட்டிலும் இவர்களுக்கு வெண்ணிறம் அதிகமாகும். இப்பிரிவினர் ஆசியாமைனரிலும், அரேபியாவிலுமே வெகுவாக வசித்தனர். அந்நாடுகளிலிருந்தே இந்தியாவில் குடியேறி இருத்தல்கூடும். பாஞ்சாலத்தில் இவ்வகையினர் பெருந் தொகுதியாக இருப்பினும், சிந்து, ராஜபுதனம், ஐக்கிய மாகாணத்தின் மேற்குப்புறத்திலும் இப்பிரிவினரைக் காணலாம். நாட்டின் மற்றைய பாகங்களிலும் ஆங்காங்கே காணப்படுகின்றனர்.

## மேல் நாட்டு அகன்ற மண்டையர்

V. திபெத்திய மங்கோலிய இனவகையே மட்டுமின்றி, வேறு பல வகைகளும் இந்திய ஜனத்தொகையில் கலந்துள்ளன. மேலை நாட்டு அகன்ற மண்டையினர் (Western Brachycephals) அல்லது ஆல்பீனியர் (Alpines) இவர்களுக்கு ஐரோப் பாவினோடு இருந்த தொடர்பினால் இப்பெயரிடப்பட்டது, டினாரிக்கியர் (Dinarics) டினாரிக் ஆல்ப்ஸ் மலைப் பகுதியினர், ஆர்மினாய்ட்டுகள் (Armenoids) என்னும் பிரிவுகள் குறிப்பிடத்தக்கன.

அகன்ற கபாலம் மானிடச் சரிதத்தில் பிற்காலத்தின் அம்சமாகும். பழம் வகைகளுக்கு நீண்ட தலையே உண்டு. கபாலம் அகலமாக வளருவதற்கும், மலைப் பாங்கான உயர்ந்த இடங்களுக்குமிடையில் யாதோ தொடர்பிருப்பதாகவே தோன்று கிறது. இத்தகையதொரு தொடர்பினால் மத்திய ஆசியாவின் மலைப்பகுதிகளில் மண்டையோடு அகலமாக வளர்வதற்கேற்ற வசதிகளிருந்தமையால், அவ்விடமே அகன்ற மண்டையுடைய இனத்தவரின் தோற்றுவாயாக ஏற்பட்டது. எனினும் இதையொத்த விசேஷ உறுப்பு வளர்ச்சி ஓரிரண்டு இடங்களில் சமகாலத்தில் தோன்றி யது போலும். திபெத்திய பீட பூமியிலும், அதன் வடபுறத்திலும் வசித்த மங் கோலிய இனமக்களுக்கும், தென்மேற்கு ஸைபீரியாவின் ஆர்மீனியப் பிரதேசவாசி

களுக்கும் அகன்ற கபால வளர்ச்சி சமகாலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். தற்போது ஐரோப்பிய இனமக்கள் பலருக்கும் அகன்ற மண்டை பொதுவாக உள்ளது.

(1)ஆல்பைன் அகன்ற தலைவகையினர் நடுத்தரமான உயரம், அகன்ற கபாலம், வளைந்த பிடரி, வட்டமான முகம், பெரிய மூக்குடையவர்கள். மத்தியத் தரைக் கடல் இனவகையினரைவிட வெளுத்த மேனியும், உடல் நிறைய ரோமமும் பெற்றவர். உடலும் கனத்து, வலிவுடைத்தாகும்.

(2) டினாரிக் (Dinaric) இனத்திலோ மக்களின் உயரம் அதிகமாயும், கேசமும் கண்களும் அழுத்தமான நிறத்தோடும் காணப்படுகின்றன. மண்டை அகன்றிராவிடினும், குட்டையாக சப்பையாய், செங்குத்தான பிடரியுமுண்டு. நெற்றியும் உட்புறம் தள்ளி, கபால வளைவு உயர்ந்துள்ளது. முகம் நீளமாய், கழுகு மூக்கைப்போல் வெளிப்புறமாய் நுனியில் வளைந்த மூக்குடைத்தாகும். பின் மண்டையின் செங்குத்தான வடிவமும், வளைந்த மூக்குமே இவ்வகையின் விசேஷ இலக்கணங்கள்.

(3) ஆர்மினாய்டுகள் (Armenoids) இடம் மேற்கூறிய விசேஷ உறுப்புகள் சற்று அதிகமாகவே வளர்ச்சி பெற்று, இப்பிரிவின் விசேஷ அங்கங்களாகவும் விளங்குகின்றன.

மேற்கூறிய மூன்று பிரிவுகளுள்ளும் மங்கோலிய இன அம்சங்கள் அருகியே உள்ளன. இவற்றுள்ளும் டினாரிக், ஆர்மினாய்டு பிரிவுகளை அவருடைய நாசியும், சரீர ரோமமும், மங்கோலிய இனத்தினின்றும் பெரிதும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

ஐரோப்பாவில் அகன்ற தலையினம் குடியேறிய காலமும், புது கற்காலமும் (New stone age) காலமும் ஒன்றாயின. இவ்வினம் இந்தியாவில் குடியேறிய காலத்தைத் திட்டமாகக் கூறஇயலாது. எனினும் உலோக காலத்தின்(chalco lithic)சின்னங்களான சிந்து சமவெளிப் பொருள்களிலும், இரும்புக் கால(Iron Age) நாகரிகத்தின் இருப்பிடங்களான திருநெல்வேலி, ஹைதராபாத்திலும் மேற்கூறிய ஆல்பினாய்ட், டினாரிக் வகையினரது மண்டையோடுகள் கிடைத்துள்ளன. பெர்டிரம் தாமஸ்(Bertram Thomas) என்பவரது ஆராய்ச்சிகளினால் தென் அரேபியாவிலும், அகன்றதலை மக்கள் இருந்தனரெனப் புலனாகிறது. இப்பிரிவுகளுள் ஓமானி (omani) வகைக்கு சப்பையான பிடரியுண்டு. இவ்வகன்ற தலையினம் தென் பலுசிஸ்தானத்திலிருந்து மேற்குக் கரையோரமாக சிந்து, கத்தியவார், கூர்ஜரம், மகாராஷ்டிரம், கன்னடம், தமிழகம் முதலிய இடங்களில் பரவி, பின்னர் இலங்கையை அடைந்தனர். தமது குடியேற்றப் பிரயாணத்தில் இவ்வினம் மலையாளம், ஆந்திர நாடுகளைத் தாக்காதுவிட்டுச் சென்றது.

இதேபோல் வேறொரு தொகுதி கிழக்கு நோக்கிச் சென்றது. இப்பிரிவின் குடியேற்றப் பிரயாணத்தின் சின்னங்களை, கங்கை நதிக்கரை வழியாய், மத்திய இந்தியா, கிழக்கு ஐக்கிய மாகாணம், பீஹார் முதலியவிடங்களில் காணலாம். டினாரிக் பிரிவில் ஒரு சிறு பகுதி வடமேற்கு இமயமலைத் தொடர்களிலே தங்கி, பின்னர் மேற்கு நேபாளத்தில் குடியேறியது. ஆதலால் சிட்ரல் (chitral) பிரதேசத்தில்

கோ(kho)விற்கும், புருஷோ (Burusho) விற்கும் இடையேயுள்ள பிரதேசத்திலும், கில்ஜிட் (Gilgit) நாட்டிலும், அவ்வவ்நாட்டு மக்களுடன் மேற்கூறிய பிரிவினரும் கலந்து காணப்படுகின்றனர்.

டிஞரிக் வகை வங்காளத்திலும், ஒரிஸ்ஸாவிலும் மத்தியத் தரைக்கடல் இனத்தோடு கலந்துள்ளது. கத்தியவாரிலும், தமிழகத்திலும் இவ்வாறே. டிஞரிக் வகை தனது தூயவடிவில் குடகு மலை வாசிகளிடையே காணப்படுகிறது. கூர்ஜரத்தில் ஆங்காங்கே அகன்ற தலையினம் காணப்பெறினும், குஜராத்திகளின் குறுகிய முகமும், பரந்த நெற்றியும் ஆல்பிஞய்டு கலப்பையே காட்டுவதாகும். மகாராஷ்டிரத்தில் அகன்ற தலைப்பிரிவினர் நீண்ட தலைவகையினரோடு மிகுதியாகக் கலந்தே உள்ளனர்.

பம்பாயிலுள்ள பாரசீகர் அகன்ற மண்டையரேனும், ஆசியா மைனரிலிருக்கும் ஆல்பிஞய்டு வகையினரோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்களின் அண்டை நாட்டவரான குஜராத்திகளுக்கும், இவர்களுக்குமிடையில் ரத்த அணுக் கூட்டத்தில்கூட வேற்றுமை உள்ளது. பாரசீகரது ரத்த அணுச்சேர்க்கை ஸிரியர்கள் (Syrians) ஆர்மீனியர் (Armenians) போன்றவரது ரத்த அணுக்கூட்டங்களை ஒத்துள்ளது. பழம் பாரசீக மக்களின் பகுதியினராய கியுபிரிஸ் (Guebras) (அதாவது ஜாரதூஸ்திர மதத்தைப் பின்பற்றி, டெகரான் (Teheran) நாட்டில் காலா கெப்ரி (Kala Gebri)யில் வசிப்பவர்). நீண்ட தலையினரினின்றும் பெரிதும் வேறுபட்டவர். டிக்ஸன் (Dixon) என்பவர் கூறுவதற்கிணங்க கூர்ஜரத்தில் குடியேறிய பிரிவு, அகன்ற தலைவகையைச் சார்ந்து ஜாரதூஸ்திரா மதத்தை மேற்கொண்டிருத்தல் கூடும். இம்மதத்தைச் சார்ந்த கியுபீரிஸ்மட்டும் தமது நாட்டிலேயே தங்கி, பழைய இனவகையின் பிரதிநிதிகளாய் நின்றுவிட்டனர் போலும்.

## நார்டிக் மக்கள் இனம்

VI. இந்தியாவில் கடைசியாக குடியேறியவர் வடபுல்வெளி (Northern Steppe folk) மக்களான ஆரியர்களேயாகும். இவர்களும் காஸ்ஸியர்களோடு(Kassites) கி.மு. 2000த்தில் பேரலையாக இந்தியாவினுள் புகுந்தனர். இவ்வகை உருவப்பட்ட பிரதேசம் தென்கிழக்கு ருஷியாவிற்கும், தென்மேற்கு ஸைபீரியாவிற்கும் இடையிலுள்ள யுரேஷியப் புல்வெளியாகும். இவ்வெளியிலே வசித்த நீண்ட தலையினத்தவருள் சிலர் வடகிழக்கு முகமாகச் சென்றனர். தென்ருஷியா ஈம மேடுகளிலும் (burial mounds) எனிஸி பள்ளத்தாக்கிலும் (yenisie valley) மினுசிங் (Minusink) பிரதேசத்திலும் கிடைத்த வெண்கலக் காலத்தின் (Bronze age) பொருள்களுள் மேற்கூறிய பிரிவினரது எலும்புக் கூடுகளும், அசுவப் பலியைக் காட்டும் சான்றுகளும் கிடைத்துள்ளன. சீன நூல்களும், கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலே யுசி (yuechi) வகுப்பார் துருக்கிஸ்தானத்தில் துகாரியன் (Tokharian) சமஸ்தானத்தை ஸ்தாபித்தனர் எனக்கூறுகின்றன. மேலும் இந்த யுசிகள் வெளுத்த நிறமும், சிவந்த தலைமயிருமுடையரென இந்நூல்கள் கூறுகின்றன. துகாரியன் மொழியும் இந்தோ ஆரிய

மொழியினத்தோடு தொடர்புடையதாய் கிரேக்க, லத்தீன் மொழிகளைப் பெரிதும் ஒத்துமிருப்பதால், யுசிகளும் இந்தோ ஐரோப்பிய மொழியைப் பேசிய வகையினரெனக் கொள்வது பிழையாகாது.

இந்தியாவிற்கு முதன்முதலாக வந்த இந்தோ-ஐரோப்பிய பிரிவினரைக் குறித்த தொல்கலைச் சான்றுகள் (Archaeological evidence)மிக, மிகக் குறைந்தவை. கூர்ரம் (Kurram) பள்ளத்தாக்கிலும், கங்கா நதிக்கரைப் பிரதேசத்திலும் கிடைத்துள்ள சில இந்தோ—ஆரியரைக் குறிப்பனவென்றும், கி.மு. 1200-1000 காலத்தின எனவும் ஹெயின் கெல்டர்ன் (Heine Gueldern) ஆசிரியர் கூறுவர். ஆரிய வேதங்களும் இவ்வகையினர் வெளுத்த நிறமும், விசேஷ கேச வர்ணமுமுடைய வரென்பதைக் காட்டுகின்றன. சமீபகாலத்திலே தக்ஷசீலத்தில் (Taxila) தர்மராஜிக மடத்தில் கிடைத்த எலும்புக் கூடுகள் இவ்வகையினரது போலும். கி.பி ஐந்தாம் நூற்றுண்டில் வெள்ளை ஹுணர்களால் தர்மராஜிக மடம் சிதைக்கப்பட்டது. இந்தியாவில் காணப்படும் வேறு நீண்ட தலை மக்களிலிருந்து, இவர்கள் கபாலத்தின் முகத்தலளவையிலும், மண்டை வளைவிலும், நீண்ட முகம், வலிவுடைய தாடைகள் முதலியவற்றினுல் வேறுபடுகின்றனர். தற்காலத்தில் இவ்வினவகை வடமேற்கு எல்லைப்புறத்தில் பத்தானியர் (Pathans) உள்ளும், கீழ்நாட்டு மக்கள் இனம், டினுரிக் வகை முதலியவரோடும் கலந்துள்ளது. சிந்து நதிக்கும், அதன் உபநதிகளான சுவாத் (Swat) பஞ்சகோரம் குனர், சித்ரால் நதிகளுக்கும் இடைப் பிரதேசத்தில் வாழும் மக்களுள் பெரும்பாலானவர் இவ்வகையினரே. மேலும் இந்துகுஷ் மலைவாசிகளான காபிரி (Kaffirs) களிடையும் இவ்வினத்தவர் உளர். பாஞ்சாலத்திலும், ராஜபுதனத்திலும் மேல் சாதியினருள் காணப்படினும், பேரளவிற்கு நீண்ட தலையினத்தவரோடு கலந்தே உள்ளது. மேற்கிலும், வங்காளத்திலும் சிறிதளவிற்கு இவ்வகையைச் சார்ந்தவரைக் காணலாம். மகாராஷ்டிரத்தில் சித்பவன் (Chitpavan) பிராம்மணர்களுள் பேரளவிற்குக் காணப்படுகிறது. திடகாத்திரமான நெடிய உடல், (நீக்ரோக்களில் சில நெடிய வகையினரைத் தவிர வேறெவரும் இவ்வளவு உயரமானவரல்ல), நீண்ட வலிய தலை, வளைந்த நெற்றி, வெளிப்புறமாகத் தள்ளிய பிடர்த்தலை முதலியன இவ்வினத்தவரின் விசேஷ இலக்கணங்களாகும். மூக்கு குறுகலாய் நீண்டு, தண்டு உயர்ந்துள்ளது. இப்பிரிவினரது விசேஷ இலக்கணம் வெளித்தோலில் வர்ணச் சத்துக்கள் இன்மையால், மேனிக்குத் தசை நிறமும் (Flesh colour) கண்களும், ரோமமும் நீலமும், பொன்னிறமும் பெறுகின்றன. இவ்வுறுப்புக்களே இவர்களைப் பெரிதும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

வர்ணச் சத்துக்களின் அளவும், தன்மையும் சூழ்நிலைக் காரணங்களையொட்டி, பல இடங்களில் பாரம்பரியப் பண்புகளாலும், பிறப்பு வேற்றுமையாலும், தனிப்பட்டவகையினரிடம் தனிமுறைகளில் வேறுபடுகின்றன. உதாரணமாக உஷ்ணமண்டலங்களில் வசிக்கும் நீக்ரோக்களது மேனிநிறம் ஆதியில் பழுப்பு நிறமாயிருந்து, பின்னர் சூழ்நிலைக்காரணமாக கருநிறச் சத்துக்கள் தோலில் மென்மேலும் சேர்க்கப்படுவதால் அழுத்தமான கருமையாக மாறியுள்ளது. இதற்கு மாருக வடபுற புல்வெளிகளில் வசித்த மக்களுக்கு, தோலினின்று வர்ணச் சத்துக்கள் சிறுகச் சிறுகக் குறைந்தமையால் வெளுத்த நிறமேற்பட்டது. ஆயினும் இத்தகைய மாற்றங்கள் ஒரு சில

ரிடையே காணப்பெற்று, மற்றவர்களிடம் காணப்பெறுமையின் காரணத்தைத் திட்டமாகக் கூறமுடியாது. தோலில் வர்ணச் சத்துக்கள் இல்லாதிருப்பது பொதுவல்ல. பலரிடையும் வர்ணச் சத்துக்கள் பல பல அளவுகளுக்குத் தோன்றுவதால், யுரேஷியருக்கும், வட ஐரோப்பிய மக்களுக்கும் மேனி, கண், கேசம் முதலியவற்றின் நிறம் பலவகையாக உள்ளன. மேனி இலேசான பழுப்பு அல்லது வெள்ளை, அன்றி வெளுத்த நிறம், தசை நிறமாகவும் இருக்கலாம். கேசமோ இலேசான மஞ்சள், பொன்னிறம், வெளுத்த சாம்பல், சாம்பல் முதலிய எந்நிறமாகவும் இருத்தல் கூடும். கண்கள் இலேசான பழுப்பு, சிவந்த பழுப்பு, சாம்பல் நிறம், பச்சை, நீல நிறமென்பனவற்றுள் ஏதாவதொன்றைப் பெற்றிருக்கலாம். பின்னியருக்கும் (Finns) அவரோடு இணைந்த பால்டிக் மக்களுக்கும், செந்நிற வர்ணச் சத்தும் கலப்பதால் கேசத்திற்கு தனிப்பட்ட செந்நிறமும் ஏற்படுகிறது.

வடஐரோப்பியருக்கு இருப்பதையொத்த வர்ணச் சத்துக்களின் குறைவு தென் மேற்கு ஸைபீரியாவிலும், ஹிமயமலையின் வடமேற்குப் பள்ளத்தாக்குகளிலும் வசிப்பவருள் காணப்படுவதில்லை. பின்னர் கூறியவர்களுக்குச் சாதாரணமாக ரோஜா நிறத்தோடு இணைந்த வெண்ணிறம் பொதுவாயினும் ஆங்காங்கே பழுப்பு, இலேசான பழுப்பு முதலிய பலவேறுபாடுகளும் உள்ளன. கண்களின் நிறம் பெருவாரியாக இலேசான பழுப்பு முதல் சிவந்த பழுப்பு, சாம்பல் கலந்த நீலம், நீலம் முதலிய பல நிறங்களாகும். கேசமும் இவ்வாறே பல வர்ணங்களைப் பெறுகிறது. பழுப்பு நிறம் பொதுவாயினும் இலேசான மஞ்சள், சிகப்பு வர்ணங்களையும் ஆங்காங்கே காணலாம். மேற்கூறிய பல வர்ணங்களும் காபிரிஸ்தானத்திலுள்ள காடி (Kati) மரபினரிடம் விரவியுள்ளன. ஆராய்ச்சியாளர்களுள் முற்பட்டவர்களான லெயிட்னர் (Leitner) பிட்டுல்ப் (Biddulph) உஜ்பால்பி (Ujfalvy) ராபர்ட்ஸன் (Robertson) போன்றவர்கள் இந்துகுஷ் மலைவாசிகளுக்குப் பொன்னிறப் பழுப்பு வர்ணத் தலைமயிரும் இருப்பதாகக் குறித்தனர். ஒரு சிலரிடையே வெளிறு நிறமிருப்பினும், பெரும்பாலோருக்குக் கருநிறக்கண்களும் முடியுமே உள்ளன. மேலும் மேற்கூறிய வெளிறு நிறமுடைய மக்களின் தொகையோ வட ஐரோப்பாவில் காணப்படுவதைவிட மிகக் குறைவே உதாரணமாக ஸ்வீட் மக்களுள் நூற்றுக்கு நாற்பத்தொன்பது பேர் வெளிறு நிறமுடையவர். ஐரோப்பிய வகைகளிலும் தோல், கேசம், கண்கள் முதலியவற்றின் நிறங்களுக்கு யாதோ சம்பந்தமிருப்பதாகவே தோன்றுகிறது. எனினும் இவ்வுறுப்புகளுக்கு நிறங்களைத் தரும் வர்ணச் சத்துக்கள் தனித்தனியாக இணைவதால் உண்மையில் இவற்றின் நிறங்களுக்குள் யாதொரு சம்பந்தமுமில்லை. இவற்றின் நெருங்கிய தொடர்பு ஐரோப்பாவில் இவ்விலக்கணங்கள் சமகாலத்தில் தோன்றுவதற்கு ஏதுவான குறிப்பிட்டதொரு காரணத்தால் ஏற்பட்டது போலும். இக் காரணம் ஐரோப்பாவில் பயனளித்த அளவிற்கு ஆசியாவில் பயன்தரவில்லை. வட ஐரோப்பாவில் காணப்படும் பெருந்தொகையான வெளிறு நிற மக்களின் காரணம், பால்டிக் பிரதேசத்தில் ஏற்பட்ட செறிந்த அகக்கலப்பினால்தான். அகக் கலப்பு வெளிறு நிற மாற்றத்திற்குக் காரணமாயது.

இந்தியாவின் வடபுற வெளிகளில் வெளுத்த நிறம் அவ்விடத்து உஷ்ணத்திற்கு ஏற்றதல்ல. சூரிய கிரணங்களின் வெப்பக் கதிர் வீச்சை (Radiation) இந்நிறம் தடுத்து, உள்ளிருக்கும் அவயவங்களைப் பாதுகாக்க வன்மையற்றதாகும். எனவே மேற்

புறத்தினின்றும் இவ்வெளிகளில் குடியேறிய மக்களிடைக் காணப்படும் வெளிறு நிறம் சிறுகச் சிறுக குறைந்து, இயற்கைத் தேர்வு விதியின்படி அழுத்தமாயது. இவர்களுக்கு விசித்திரமான மாறுதல்கள் ஏற்பட்டன. தம்மினத்திற்குரிய திடகாத்திரம், உயரம், நீண்டதலை, முதலியவற்றைக் குறைவறப் பெற்று, வெளுத்த நிறத்தை மட்டும் படிப்படியாக இழந்தனர். இவ்வெளிறு நிற உற்பத்தி அணுக்களான ஜீன்கள் முற்றிலும் அழிந்துவிடாமல் மறைந்தே உள்ளன என்பதும் இவ்வகையினருள் ஆங்காங்கே தோன்றும் வெளிறு நிறக்கண்கள், கேசம் பெற்றவர்களால் உறுதியடைகிறது. மகாராஷ்டிரத்தில் *சித்பவன் பிராம்மணர்களுள் சுமார் நூற்றிற்குப் பத்துப்பேர் வெளுத்த (பூனைக்) கண்களுடையவர்.

மேற்கூறிய ஆறுவகை இனங்களும் அவற்றின் வகைகளுமே இந்திய ஜனத்தொகையை ஆக்குபவை. மானிட சாதியை வகைப்படுத்திக் காட்டும் மண்டலங்களைத் திட்டமாக வரையறுத்துக் கூற இயலாதெனினும் அவ்வப் பிரதேசத்தில் காணப்படும் இனத்தொகுதியைக்கொண்டு மண்டலங்களைப் பிரித்தல்கூடும். அத்தகையதொரு பிரிவே பின்வரும் எல்லைப்படத்தில் குறிப்பிடப்பட்டது. எனினும், இம்மண்டலத்தில் வாழுவோர் இவ்வினத்தவரே எனக்கூறுவது மிகையே. ஏனெனில் இனவகைகளுள் கலப்பு பேரளவிற்கு ஏற்பட்டுள்ளது. எனினும் பொது முறையில் மத்தியத் தரைக்கடல் இனம், கீழ்நாட்டு இனப்பிரிவுகளோடு கலந்த நார்டிக் இன மண்டலத்தை வடமேற்கு இந்தியாவிலும், தக்கண தீபகற்பத்திலே தொன்மையான பழைய மத்தியத் தரைக்கடல் இனவகை மண்டலத்தையும் எளிதில் காணலாம். இவ்விரு இனமண்டலங்களின் இருபுறத்திலும் ஆல்போ-டினாரிக் (Alpo-Dinaric) இனவகை வேறு பிரிவுகளோடு கலந்து தென்படுகிறது. பழங்குடி அம்சம் எல்லா இனப் பிரிவுகளிலும் ஆங்காங்கே கலந்து மற்றப் பிரிவுகளின் கூட்டுறவால் தாக்கப்பெற்று, விசேஷமாக பழைய மத்தியத் தரைக்கடல் அம்சத்தினால் பேரளவிற்கு மாறி, ஜனத்தொகையின் கடைகழி மக்களென வழங்கப்படுகிறது. மங்கோலிய இனவகை வடக்கிலும், கிழக்கிலும் மலையடிவாரங்களிலே வசிப்பினும், இவ்வினத்தவரின் பல அம்சங்களும் மற்றைய பிரிவுகளோடு ஆழமாக கலந்தே தோன்றுகின்றன.

## இனப் பிரிவுகளும் மொழி கலாசாரப் பாகுபாடும்

இந்தியாவின் இனப்பிரிவுகள் மொழி, கலாசாரப் பிரிவுகளுடன் பொருந்துவதில்லை. மொழிகளும், சமூகப் பழக்க வழக்கங்களும் சேர்க்கையினால் பெறப்படுபவையாதலின், மாற்றத்திற்கு உரியவை. எனினும் குடிகளின் வாசஸ்தல மண்டலங்களுக்கும், மொழிகளுக்குமிடையே ஓரளவு பொருத்தமுள்ளது. திராவிட மொழிகளைப் பேசுவோர் தென்புறத்தில் விந்தியமலைக்குத் தெற்கே வாழுபவர். மத்திய இந்தியாவின் மலைப்பிரதேசங்களில் வசிப்பவர் ஆஸ்டிரிக் (Austric) மொழிகளைப் பயிலுவோர். சிந்து, கங்கை, நதிகளின் வடகரையிலும், மேற்கு, கிழக்குப் பிரதேச வாசிகள் ஆரிய மொழிகளையே பேசுகின்றனர். வடக்கு, கிழக்கு எல்லைப்புறங்

*** சித்பவன் பிராம்மணர்கள் பாரசிகத்தினின்றும் குடியேறியவரென்பது சிலருடைய கொள்கையாகும். இது பொருத்தமானதல்ல. வடநாட்டினின்றும் திக்கு விசயத்திற்காக தக்காணத்தில் போந்த கூட்டத்தின் ஒரு பகுதி, தமது பிரயாணத்தில் தடைபட்டு தக்காணத்திலேயே தங்கி, தனிக் குழுவினராக வசித்தனரென்பதே பொருந்தும்.**

களில் மலையடிவாரங்களிலுள்ளோர் திபெத்திய—சீன (Tibeto chinese) மொழியினத்தைச் சார்ந்த மொழிகளைப் பயிலுகின்றனர். ஒவ்வொரு மொழிவகையிலும் பற்பல இனத்தவரும் கலந்துள்ளனர். இவ்வினப் பிரிவுகள் ஒன்றேனும் அக்கூட்டத்தவரால் பேசப்படும் மொழியோடு இணைந்ததல்ல. உதாரணமாக திராவிட மொழியினத்தைச் சார்ந்த மொழிகள் நீக்ரிட்டோ இனப்பிரிவினராய காடர் புலையர், இருளராய பலராலும், பழைய ஆஸ்திரேலிய இனவகையைச் சார்ந்த செஞ்சுக்கள், மால்ஸர் கோண்டுகளாலும், பழைய மத்தியத்தரைக்கடல் வகையினரான தமிழர், ஆந்திரர், ஆல்போ—டினுரிக் இனத்தவராய கர்நாடக, குடகுவாசிகளாலும் பேசப்படுகின்றன. ஆரிய மொழிகளோ நார்... சிகப்பு காப்பிரிகள், பழைய ஆஸ்திரேலிய பில்கள் (Proto Australoid Bhils) பழைய மங்கோலிய இன சூர்க்கர் (Gurkhas) போன்ற பலரது மொழிகளாகும். அதேபோல் திபெத்திய—சீன மொழிகளை அம்மண்டலத்திலுள்ள இன வகையினர் யாவரும் பேசுகின்றனர். ஆஸ்டிரிக் மொழிகளோ, அஸ்ஸாமிலிருக்கும் பழைய மங்கோலிய இனத்தவரன்றி, முண்டர், சந்தால், ஹோஸ் (Hos) போன்ற மத்திய இந்திய வகையினருக்கும், மலேயா தீபகற்பத்தில் வசிக்கும் சிமாங்கு (Semang) சாகாய் (Sakai) மக்களுக்கும் தாய்மொழிகளாய் உள்ளன. ஜீன் ப்ரிஸிலுஸ்கி (Jean Przyluski) போன்ற ஆசிரியர்கள் வரையறுத்ததைப் போல், "திராவிடம்," "ஆஸ்டிரிக்" என்னும் சொற்களுக்கு இனப்பொருளைத் தருவது ஏற்புடைத்தல்ல.

இந்திய மொழிகளின் பிறப்பையும், அவற்றைக்கொண்டுவந்த மக்களின் இன வகைகளையும் திட்டப்படுத்துவதே கடினம். அதைக்காட்டிலும் கடினமாயது இவ்வேறு பிரிவினர் இந்திய கலாசாரத்தை நிருமாணிப்பதற்கு ஆற்றிய தொண்டை வகைப்படுத்துவது. ஏனெனில் நிச்சயமாக அளவிடுதற்கு வேண்டிய ஆதாரங்கள் இடையா. உதாரணமாக நீக்ரிட்டோக்கள் இந்திய கலாசாரத்தின் எப்பகுதியின் ஆதினர்களோ அறியோம். எனினும் அரசமர (அசுவத்தம்) வழிபாடு இவர்களின் கூட்டுறவால் ஏற்பட்டதெனக் கருதுவதற்கு ஏதுவுண்டு. குழுச்சின்ன சடங்குகள் Totemistic rites) மாந்திரீகம், உணவுக்கட்டுப்பாடுகள் (Food taboos) மந்திரங்களில் நம்பிக்கை பழைய ஆஸ்திரேலிய இனத்தவரால் தரப்பட்டவை. உடனிருந்து உணவருந்துதல் (commensality) கலப்பு மணம் முதலியவற்றுள் காணப்படும் கட்டுப்பாடு விதிகள் இவர்கள் தந்தவையே போலும். இன்று நமது சமுதாயத்தில் மேற்கூறிய விதிகளே சாதிவேற்றுமைக்குக் காரணமாகின்றன. பட்டு, தேயிலை, அரிசி, காகிதம், மேடைகளின்மேல் பயிரிடுதல், பொது வாசஸ்தல ஏற்பாடுகள், தலை வேட்டை, தாம்பூலம் முதலியன மங்கோலிய இனத்தவர் (Mongoloids) இந்திய கலாசாரத்திற்கு அளித்தவை. இம் மங்கோலிய இனத்தின் ஒரு பிரிவான ஓஷியானிக் (oceanic) கடற்கரை வகையினரே புறங்களில் நீண்ட கனோபடகுகளையும் (outrigger canoes) தேங்காய், அனுசிப்பழச் செடிகளையும் கொண்டு வந்தவர். பழைய மத்தியத் தரைக்கடல் இனத்தவரே மண்பாண்டங்கள், கற்கால கலாச்சாரம், அதனோடு இணைந்த அபிவிருத்திச் சடங்குகள் (Fertility rites) நரபலி முதலியவற்றின் காரணமாயவர். இவர்களே தென்னாட்டில் காணப்படும் தாய்வழி உரிமைக்கும் (Matriarchy) அதன் காரணமாக பெண்களின் உயர்பதவிக்கும்

காரணர்களாய் விளங்கியவர். மத்தியத் தரைக்கடல் இனமே சிந்து சமவெளி நாகரிகத்தை ஓம்பி, நம் நாட்டின் மதத்திற்கும் கலாசாரத்திற்கும் அடிகோலியது. வீட்டிலே வளர்க்கும் மிருகங்கள், நதி போக்குவரத்து, ஆடை, கட்டட அமைப்பு, செங்கல், வர்ணம் தீட்டிய மட்கலங்கள், நகர அமைப்பு யாவும் இவரது உரிமைகளே. வான சாஸ்திரமும், இந்திய அக்ஷர வடிவமும் (Script) இவர்களால் தரப்பட்டவையே ஆல்போ-டினுரிக் வகையினர் எம்முறையில் இந்திய கலாசாரத்திற்கு உதவினர் எனத் திட்டமாகக் கூறஇயலாது. ராமப் பிரசாத் சண்டா (Ramprasad chanda) கூறுவது உண்மையாயின், இவர்களே, கூர்ஜரத்திலும், வங்காளத்திலும் காணப்படும் செறிந்த மதவுணர்ச்சிக்கும் பக்தி வழிபாட்டிற்கும் காரணமாயவர்.

நார்டிக் இனப்பிரிவினர் குதிரைகள், இரும்பு, உயர்ரகக் கோதுமை முதலியவற்றைக் கொண்டுவந்தவர். இந்தியாவில் பயிர்செய்த கோதுமை 48 கிரோமசோமுடைய வகையைச் சார்ந்ததாகும். இவ்வகை முதன்முதலாக ஆப்கானிஸ்தானத்தில் தோன்றி, அங்கிருந்து இந்தியாவிற்கு வந்ததென அறிஞர் கூறுவர். பால், மது முதலியவற்றை உபயோகித்தல், சூதாட்டம், தேர்ப்பந்தயம், தைத்த உடைகள் முதலியன இவரளித்தனவேயாகும். இந்திய கலாசாரத்துள் தந்தை வழி உரிமையைப் (Patriarchy) புகுத்தியவர் இவர்களே. யாவற்றிற்கும் மேலாக உயர்ந்த திருத்தமும், மென்மையுமுடைய ஆரியமொழி இவர்களுடையதே. இந்திய கலாசாரத்திற்குரிய தற்போதைய உருவத்தை ஆக்கியவரும் இவர்களே. இவர்களமைத்த வடிவத்தில் மற்றையோரது பங்களிப்பு, ஆங்காங்கே ஏற்றமுறையில் அமைந்து, இந்திய நாகரிகமென்ருயிற்று. புறப்பண்பாட்டைக் காட்டிலும், அகப்பண்பாட்டு வளர்ச்சியில் இவர்களது பரிசளிப்பு பெரிதும் பயனளித்தது. காவிய நடை, ஜகத்பிரமாணம் அல்லது ரீதி (Ṛta) ஒழுக்கக் கோட்பாடுகள், வேதாந்த கொள்கைகள், இயற்கை சாஸ்திரம் ஆகிய இந்திய கலாசாரத்தின் முக்கிய அம்சங்கள் யாவும் இவ்வினத்தாரால் அளிக்கப்பெற்றனவே. எனவே இந்திய இலக்கியம், வேதாந்தம் கலையென்னும் சிறப்புகளுக்கு நேர்முகமாகவோ, குறிப்பாகவோ இவர் காரணரல்ல எனக்கூறுவது சரித்திரச் சான்றையும், சாஸ்திர உண்மையையும் மறுப்பதாகும்.

## சித்திரங்களின் விவரம்.

நீக்ரிட்டோ வகை: 1. சிறிய சுருள் மயிருடைய அந்தமான் வாசி. 2. சிறிய சுருளுடைய கொச்சிமலை காடர். 3. நீண்ட சுருளுடைய கொச்சிமலைக் காடர்.

பழைய ஆஸ்திரலாயிட் வகை. 4. திருவிதாங்கூர் புலையப்பெண். 5. திருவிதாங்கூர் ஊராளிப் பெண். 6. ரேவாவிலுள்ள பைகா.

பழைய மங்கோலாயிட் வகை: (அ) நீண்ட மண்டையர். 7. அஸ்ஸாம் சிமா நாகன். 8. நேபாளத்து லிம்பு. (ஆ) குறுகிய அகன்ற மண்டையர். 9. கலிம்பாங்கிலுள்ள லெப்சா பெண்.

திபெத்திய மங்கோலாயிட் வகை: 10. சிக்கி திபெத்தியன்.

பழைய மத்தியதரைக்கடல் வகை: 11. மதுரையிலுள்ள தமிழ் பிராமணன். 12. கொச்சி நாயர் பெண். 13. விசாகப்பட்டணத்து தெலுங்கு பிராமணன்.

மத்தியதரைக்கடல் வகை. 14. கொச்சி நம்பூதிரி பிராமணன். 15. இந்தூர் மராத்திப் பெண். 16. அலகபாத்து பிராமணன். 17. கல்கத்தாவின் வங்காளப் பிராமணப் பெண்.

மேற்நாட்டு இனம். 18. லாகூரின் பஞ்சாபி சத்திரி. 19. பிஜார் பதான் (வட மேற்கு எல்லை மாகாணம்). 20. கூர்ஜரத்தின் நாகர பிராமணன்.

ஆல்பினோ—டினரிக் வகை: 21. பலுசிஸ்தானத்து பிராஹுயி. 22. பவநகரின் பனியா கபோல (கத்தியவார்). 23. கல்கத்தாவின் வங்காள காயஸ்தன். 24. மதுரையில் தமிழ் செட்டி.

நார்டிக் வகை: 25. டுரிகோவின கோ (சித்ரால்). 26. ராம்பூரின் காலாஷ (சித்ரால் காப்பிரிஸ்தானம்). 27. பிரிமிதலிலுள்ள சிகப்பு காப்பிரி (சித்ரால் காப்பிரிஸ்தானம்).



1



2



3



4



5



6



7



8



9



10



11



12




13



14



15




16



17



18


இனங்களைக்காட்டும்
இந்தியாதேசப்படம்
(சுமாராக)
66°
70°
78°
82°
86°
90°
94°
32°
28°
24°
20°
16°
12°
8°
74°
4
5
6
7
8
8a
5a
4
2
4a
7a
3b
3
2
5
3
3a
2
3a
3c
1

# இனவகைகளைக் காட்டும் தேசப் படம்

(ஏறக்குறைய)

சிறுபிரிவுகள் குறிக்கப்படவில்லை.

1. நீக்ரிட்டோக்கள்.

2. பழைய ஆஸ்திரலாயிடு இனமும், நீக்ரிட்டோக்களும்.

3. பழைய மத்தியத்தரைக்கடலினரும், பழைய ஆஸ்திரலாயிடு இனமும்.

3-(a). பழைய மத்தியத்தரைக்கடலினர், பழைய ஆஸ்திரலாயிடு இனம், ஆல்போ-டினரிக் வகையினர்.

3-(b). பழைய மத்தியத்தரைக்கடலினர், பழைய ஆஸ்திரலாயிடு இனம், ஆல்போ-டினரிக் வகையினர், பழைய நார்டிக் வகையினர்.

3-(c). பழைய ஆஸ்திரலாயிடு இனம், ஆல்போ-டினரிக் வகையினர்.

4. ஆல்போ-டினரிக் வகையினர், கீழ் நாட்டினர், மத்தியத் தரைக் கடலினர்,

4-(a). பழைய மத்தியத் தரைக்கடலினர், மத்தியத் தரைக்கடலினர் ஆல்போ-டினரிக் வகையினர்.

5. மத்தியத் தரைக்கடலினர், கீழ்நாட்டினர், பழைய நார்டிக் வகையினர்.

5.-(a). பழைய மத்தியத்தரைக்கடலினர், மத்தியத் தரைக்கடலினர், கீழ் நாட்டினர்.

6. கீழ்நாட்டினர், திபெத்திய மங்கோலாயிடு இனம்.

7. திபெத்திய மங்கோலாயிடு இனம், பழைய மங்கோலாயிடு இனம்.

7-(a). அகன்ற மண்டை பழைய மங்கோலாயிடு இனம்.

8. பழைய மங்கோலாயிடு இனம்.

8-(a). பழைய மத்தியத்தரைக் கடலினர், பழைய மங்கோலாயிடு இனம்.

Printed at The Royal Printing Works, Mount Road, Madras-2.

## List of Agents in India from whom Government of India Publications are available—*contd.*

[Continued from inner side of the front cover.]

**LUCKNOW—**
J. Ray & Sons.
Law Book Agency, 29-A, Kachery Road.
New Oxford Book Co., Jehangirabad Palace.
Universal Publisher Ltd., Plaza Building, Hazarat Ganj.
Upper India Publishing House, Ltd., Literature Palace, Aminuddaula Park.

**LUDHIANA—**
Lyall Book Depot.
Mr. Dharam Prakash, B.Sc., Banjiman Road.

**MADRAS—**
Devine Trading Co., 22, Namasivaya Mudali Street, Triplicane.
Higginbothams.
K. Krishnamurthy, Mount Road.
Presidency Book Supplies, 8-C, Pycrofts Road, Opp. Victoria Hostel, Triplicane.
Supdt., Government Press, Mount Road.
Varadachary & Co., Messrs. P.

**MANGALORE—**
U. R. Shenoy & Sons, Car Street.

**MEERUT CANTT.—**
Mr. Dharam Prakash, B.Sc.

**MEERUT CITY—**
Prakash Educations Stores, Near Tehsil.
University Book Depot, Near Tehsil.

**MYSORE—**
J. Nanumal & Sons, Lansdowne Buildings.

**NAGPUR—**
Supdt., Government Printing, Central Provinces.

**NEW DELHI—**
Amrit Book Co., Connaught Circus.
Bhavnani & Sons, Connaught Place.
Bodh Raj Marwah, Shop No. 65, Pussa Road Market, Karol Bagh.
Clifton & Co., Original Road. Karol Bagh.
Empire Book Depot, 278, Aliganj, Lodi Road.
English Book Store, G-Block, Connaught Circus.
Faqir Chand Marwah & Sons, No. 1-A, Regal Building, Connaught Circus.
Harikishan Das Bedi, R.S., 22, Annexe Feroze Shah Road.
J. Ray & Sons (India), Ltd., 2, Regal Building.
Jain Book Agency, Connaught Place.
Jayna Book Depot, Chapparwala Kuan, Karol Bagh.
Oxford Book & Stationery Coy., Scindia House.
Ram Krishna & Sons (of Lahore), 13/13, Connaught Place.
Saraswati Book Depot, 15, Lady Hardinge Road.
Sikh Publishing House Ltd., 7-C, Connaught Place.

**PATIALA—**
Jainco, Booksellers, etc., Bazar Shaha Nashin.

**PATNA—**
Sohan Singh & Sons, Pirmohani, P.O. Kadm Kuan.
Supdt., Government Printing, Bihar, P.O. Gulzar Bagh

**PATNA CITY—**
*Hindi Pustak Agency.
Lakshmi Trading Co., Padri-ki-Haveli.
Raghunath Parshad & Sons.

**POONA—**
Deccan Book Stall, Fergusson College Road.
Express Book Service, East Street.
International Book Service, Deccan Gymkhana.

**PUDUKKOTTAI—**
P. N. Swaminathan Sivam & Co., Perumal Vilas, Bazar Street

**RAJKOT—**
Mohal Lal Dosabhai Shah.

**RANCHI—**
Ideal Book Store Near Paristhan Theatre, Main Road.

**ROORKEE—**
Cambridge Book Depot.

**SHILLONG—**
Supdt., Assam Secretariat Press.

**SIMLA—**
J. Ray & Sons (India), Ltd.
Azad Kitab Mahal, Stall No. 13.
Minerva Book Shop, Regal Cinema Building.
Sunder Das & Sons 141, Lower Bazar.

**SIROHI—**
National Trading Co.

**SURAT—**
Shree Gajan Pustakalya, Tower Road.

**TRICHINOPOLY FORT—**
Krishna Swami & Co., Messrs. S., Teppakulam

**TRIVANDRUM—**
International Book House, 33, Valia Chalai.

**UDAIPUR—**
Mewar Book Depot.

**UJJAIN—**
Manakchand Book Depot Patel Bazar.

**VELLORE—**
Venkatasubban, Mr. S., Law Bookseller.

* For Hindi Publications only.

PRINTED AT THE ROYAL PEINTING WORKS, MADRAS-2.